கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam
விலை ரூபா 10.00

## குறளமுதம்–68

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

அதிகாரம்–6 அறத்துப்பால் மக்கட்பேறு

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்உயிர்க்கு எல்லாம் இனிது

தம்மைவிட மிகுதியாகத் தம் மக்கள் கல்வி அறிவு உடையவராயிருத்தல் (பெற்றோராகிய தமக்கு மட்டுமன்றி), இப்பேருலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் இன்பம் தருவதாம்.

மலர்–06 ஆகஸ்ட் –2013 இதழ்–68

# 40வது ஆண்டு சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு சிறப்பு மலரான கற்பகதரு சமாசத்தினால் கடந்த மாதம் 26ம் திகதி வெளியிட்டு வைக்கப்பட்டது.

சமாசத் தலைவர் திரு நா.கணேசன் தலைமையில், சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவுக்கு முதன்மை விருந்தினராக கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் திரு சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அவர்களும், கௌரவ விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய திருமதி மதுமதி வசந்தகுமார் அவர்கள் சார்பாக கூட்டுறவு அபி. ஊதவி ஆணையாளர்



திரு கணேஸ், வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் செல்வி க.பிரபா ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன், முல்லைத்தீவு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு இ.பாலச்சந்திரன், வடபிராந்திய மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நூலின் வெளியீட்டுரையை ஆற்றிய யாழ்.பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறை தலைவர் திரு இ.இரட்ணம் அவர்கள் தனதுரையில்,

"கூட்டுறவுத்துறை ஒரு உன்னதமான அமைப்பாகும். அதனை யாராலும் அழிக்கவும் முடியாது, அழியவும்மாட்டாது. ஏனென்றால், அது மக்களால் உருவாக்கப்பட்ட இயக்கமாகும். (7ம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்குத் தேவையான போத்தற்கள்ளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

உற்பத்தி குறைவான நிலையில் உள்ள பனை தென்னை வள சங்கங்களின் விற்பனைக்கு தேவையான போத்தற் கள்ளினை அதிக போத்தற் கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சங்கங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு கடந்த மாதாந்த மாநாட்டின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முதல் சுற்றில் 5,000 போத்தல் கள்ளினை ரூபா 50 விலைக்கு வழங்குவதற்கு பண்டத்தரிப்பு சங்கம் முன்வந்துள்ளது. ஆடுத்த சுற்றில் தெல்லிப்பளைச் சங்கம் வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிட வன்னி மாவட்டத்துக்கு தெல்லிப்பளை சங்கம் 40,000 போத்தல் கள்ளினையும், வலிகாமம் கொத்தணி 100,000 போத்தல் கள்ளினையும், சங்கானை சங்கம் 30,000 போத்தல் கள்ளினையும், மானிப்பாய் 50,000 போத்தல் கள்ளினையும், யாழ்ப்பாணம் சங்கம் 10,000 போத்தல் கள்ளினையும் விநியோகம் செய்யத் தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான விற்பனை விலை ரூபா 48-50ற்கு இடைப்பட்டதாக இருக்கும் (8ம் பக்கம் பார்க்க)

## கயிறிழுத்தல், மென்பந்து போட்டிகள் நடைபெறவுள்ளன

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச. சமாசம் தனது உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், முன்பள்ளி மாணவர்களுக்கிடையே சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு நடத்தி வருகின்ற போட்டிகளில் ஒரு தொகுதிபோட்டிகள் முடிவடைந்துள்ளன.

அடுத்த கட்டப் போட்டியாக கயிறிழுத்தல் போட்டி இம்மாதம் 22ம் திகதி (8ம் பக்கம் பார்க்க)

## விபத்து மரண, ஓய்வூதிய கொடுப்பனவுகள்

சமாசத்தின் விபத்து ஓய்வு நலத் திட்டத்தின்கீழ் இம்மாதம் விபத்துக்குள்ளான அங்கத்தவர்கள், விபத்து மரணம் எய்திய அங்கத்தவர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவுகளும் 60வயதினைப் பூர்த்தி செய்து ஓய்வு பெற்ற அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியமும் வழங்குவதற்கு சமாச பணிப்பாளர் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (8ம் பக்கம் பார்க்க)

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

**சிந்தனைத்துளி**

"கனவுகாண நேரத்தை எடுத்துக்கொள், அது சாதனைக்கு வழி" –அறிஞர்–

## கற்பகக்கரு

### நிதர்சனமாக்கப்பட வேண்டும்!

வடமாகாணத்தில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 40 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தமை தொடர்பாக சங்கங்களின் ஆதரவோடு "கற்பகதரு" என்ற பெயரினைக் கொண்ட சிறப்பு மலர் ஒன்றினை சமாசம் அச்சிட்டு கடந்த மாதம் வெளியிட்டுள்ளமை அனைத்து கூட்டுறவாளர்களாலும் பாராட்டப்பட்ட ஓர் நிகழ்வாகும்.

1972ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இச்சங்கங்கள் கடந்த 40 ஆண்டுகளில் பல்வேறு யுத்த சூழ்நிலைகளினை எதிர்கொண்டு பல்வேறு முன்னேற்றங்கள், பின்னடைவுகள் என்பவற்றை சந்தித்து, இன்று பல கோடி ரூபா சொத்துக்களை தன்னகத்தே கொண்டு அதன் அங்கத்தவர்கள், பணியாளர்கள் மற்றும் அவர் சார்ந்தோருக்கு பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமையை இம்மலர் வெளிக்காட்டி நிற்கின்றது.

இச்சங்கங்களின் செயற்பாடுகளை இத்துறை சார்ந்த எதிர்கால சந்ததியினர் அறிந்துகொண்டு தம்மை வளப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக சங்கங்களின் வரலாறுகள், அவை சார்ந்த புகைப்படங்கள் என்பவற்றோடு இந்நிறுவனங்களை உருவாக்கித் தந்த முன்னோடிகளின் புகைப்படங்களையும் கொண்டுள்ளமை ஓர் சிறப்பம்சமாகும்.

மேலும் இச்சங்கங்களின் அனுசரணையோடு சமாசத்தால் வெளியிடப்பட்ட 10வது, 25வது ஆண்டு சிறப்பு மலர்களில் இந்நிறுவனங்களின் எதிர்கால செயற்பாடுகள் கால மாற்றத்துக்கு ஏற்ப எவ்வாறு அமைய வேண்டும் என அட்டைப்படத்திலும், ஏனைய ஆக்கங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்ததோ, அதனை இந்நிறுவனங்கள் தமது சிறந்த செயற்பாடுகள் மூலம் குறிப்பிட்ட அந்தக் காலப்பகுதிக்குள் நிதர்சனமாக்கியுள்ளமை மிகப்பெரும் சாதனையாகும்.

அதே போன்று இந்த 40வது ஆண்டு மலரிலும் இந்நிறுவனங்கள் எதிர்கால செயற்பாடுகளின் நோக்கு எதனை முதன்மைப்படுத்தியதாக அமைய வேண்டும் என்பதை இம்மலர் அட்டைப்படம் எடுத்துக்காட்டி நிற்பதுடன், இம்மலரின் கட்டுரைகளும் அதனையே எடுத்துரைக்கின்றன. அதாவது பனை தென்னை வளங்களிலிருந்து உபஉணவு உற்பத்திகளில் தன்னிறைவு காண்பதுடன் அவற்றினை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் எமது நிறுவனங்கள் மிகப்பெரிய வளர்ச்சியினை அடையவேண்டும் என்பதே அதுவாகும்.

எனவே, இந்த இலக்கினை அடையவேண்டுமாயின், நாம் மிகப்பெரும் முயற்சிகளை எடுப்பதுடன், மிகப்பெரிய சவால்களையும் சந்திக்கவேண்டியிருக்கும் என்பதும் எதிர்பார்க்கப்படவேண்டியதே. எனினும் நாம் அனைவரும் ஒற்றுமையோடும் இதயசுத்தியோடும் கடுமையாக உழைப்போமானால் இந்த இலக்கினை அடுத்த 50வது ஆண்டு பொன்விழாவுக்குள் எய்தமுடியும் என்பதற்கு ஏனைய இரண்டு மலர்களிலும் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிதர்சனமாக்கியமையை எடுத்துக்காட்டாக முன்வைக்க கற்பகம் விரும்புகிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

ஆசிரியர்

## கெருடாரூட வாக்கியம் 5

பாம்புகள், பாம்புக் கடிகள், அதற்கான மருந்துகள் தொடர்பாக கூறும் கெருடாரூட வாக்கியத்திலிருந்து சில பகுதிகள்

### நல்ல பாம்புகளின் ஜாதி

**பிரமஜாதி**

அனந்தன், குளிகன் என்னுஞ் சர்ப்பங்கள் வெள்ளை நிறத்தைப் பெற்றிருக்கும். இவை சனிக்கிழமை இரவிலும் ஆதித்த வாரம் காலையிலும் இரையெடுக்க வெளிவரும். அது சமயம் எதிர்ப்பட்டால் அவர்களை முன்பக்கத்திலும் வலது பக்கத்திலும் தீண்டும். அவ்விஷத்தினால் வாதக்கடுப்பு அதிகரிக்கும் மயக்கமுண்டாகும்.

**ஷத்திரிய ஜாதி**

சங்கபாலன் என்னும் சர்ப்பங்கள் செம்பொன்னிறம் பெற்றிருக்கும். அவை சனிக்கிழமை பகலிலும் சோமவாரம் பகல் இருபது நாழிகை வரையிலும் இரையெடுக்க வெளிவரும். அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்ப்பட்டவர்களை இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் அவை தீண்டும். இவ்விடத்தினால் பித்தக்கடுப்பு அதிகரிக்கும்.

**வைசிய ஜாதி**

தக்கன், மகாபதுமன் என்னுஞ் சர்ப்பங்கள் மஞ்சள் நிறமுடையன. அவை சக்கிர வாரத்தன்றும் மங்கள வாரத்தன்றும் பகல் இருபது நாழிகைக்கு மேற்பட்டு அஸ்தமிக்கும் வரை இரையெடுக்க வெளியில் வரும். அதுசமயம் எதிர்ப்பட்டவர்களை இடப்புறத்திலும் பின்புறத்திலும் தீண்டும். அவ்விஷத்தினால் கபம் அதிகப்படும்.

**சூத்திர ஜாதி**

பதுமன், கார்க்கோடன் என்னுஞ் சர்ப்பங்கள் கருமை நிறைந்தவை. அவை புந்திவாரத்திலும் குருவாரத்திலும் பகல் பதினைந்து நாழிகைக்கு மேல் தீப சமயம்வரை இரையெடுப்பதற்கு வெளியில் வரும். அது சமயம் எதிர்ப்பட்டவர்களை இடது பக்கத்திலும் பின்பக்கத்திலும் தீண்டும். அவ்விஷத்தினால் கபமும் நொந்திப்பும் அதிகப்படும்.

### மந்திரவாதிக்கு அறிவிப்பு

இந்த நான்கு ஜாதி சர்ப்பங்களில் எது கடித்ததென்று தெரிந்து, அந்தந்த பாம்புக் கடிக்கு தகுந்த மந்திரங்களாலும் மருந்துகளாலும் விஷத்தை மீட்க முயலுதல் மந்திரவாதிகளின் கடமை.

### கடிக்குறி

கடிவாயில் புள்ளடி போன்ற கடியும் பன்னீர்போல் விஷநீரும் காணப்பட்டால் காளியென்ற பல் பட்டதாக கருதவும்.

கடிவாயில் முக்கோணம்போல கடியும் மஞ்சள் நீர் போல விஷநீரும் காணப்பட்டால் காளாஸ்திரி என்ற பல் பட்டதாக கருதவும்.

கடிவாயில் முள் தைத்ததுபோல கடியும் செந்நீர்த்துளி போல விஷநீரும் காணப்பட்டால் நீலியென்ற பல் பட்டதாக கருதவும்.

கடிவாயில் வில்போன்ற கடியும் கழுநீர்போல விஷநீரும் காணப்பட்டால் நீலகண்டி என்ற பல் பட்டதென்று கருதவும்.

–வளரும்–

# நிகழ்வுகளின் நிழல்கள்

**பனை தென்னை வள அபி.கூட்டுறவுச் சங்கங்களின் 40வது ஆண்டு விழாசிறப்பு மலரான "கற்பகதரு" நூல் வெளியீட்டு விழாவின்போது............**





# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2013

## பயிற்சி வினாத்தாள்-5

தொகுப்பு: செல்வி மதுரூபி-பாரதிதாசன் (ஆசிரியை)

### பகுதி-1

மிகவும் சரியான விடையின்கீழ் கீறிடுக.

01) "உணவுக்காக பழங்களை உண்ணும். வானத்தில் வேகமாகச் செல்லும். உடல் பச்சை நிறமாக இருக்கும் பறவை ஒன்று. அப்பறவை எது?

i) காகம் ii) புறா iii) கொக்கு iv) கிளி

02) குறுக்காகவும் மேலிருந்து கீழாகவும் மூன்று எழுத்துக்கள்கொண்ட மூன்று சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுக.

| | | |
|---|---|---|
| கு | ..... | பி |
| அ | ..... | து |
| சோ | ..... | ம் |

i) ம், மு, க ii) க, மு, ம்
iii) ம், க, மு iv) ம், மு, ள

03) "பஞ்சாமிர்தம்' தயாரிக்கப் பயன்படுபவை எவை?

i) இலைகள் ii) பழங்கள் iii) பட்டைகள் iv) காய்கறிகள்

04) 16 கிலோ கிராம் தேயிலையை வாங்கி 250 கிராம் கொண்ட எத்தனை தேயிலைப் பைக்கற்றுக்களை தயாரிக்கலாம்?

i) 64 ii) 46 iii) 16 iv) 32

05) கீழுள்ளவற்றில் 30 நாட்களைக் கொண்ட மாதம் எது?

i) தை ii) மாசி iii) பங்குனி iv) சித்திரை


06) சில இனிப்பு வகைகளை வாங்கிய பின் ரூபா 300 கொடுக்கப்பட்டபோது மீதியாக ரூபா 50 தாள் ஒன்றும் ரூபா 20 தாள் இரண்டும் ரூபா 2 நாணயம் ஒன்றும் கிடைத்தது எனின், இனிப்பு வகைகளின் மொத்தப் பெறுமதி யாது?

i) ரூபா 28.00 ii) ரூபா 300.00 iii) ரூபா 92.00 iv) ரூபா 208.00

07) KANRU என்பது 19796 ஆகும். ANRUK என்பதன் இலக்கம் யாது??

i) 97961 ii) 67961 iii) 79619 iv) 61979

08) குருதி = 324 எனில், திருகு = ..........? வெற்றிடத்துக்கு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க?




i) 5
ii) 6
iii) 9
iv) 3

09) 22198 என்பதை LAMPU என்று எழுத முடியும். ஆயின் AMPUL என்பதன் இலக்கம் யாது?

i) 19822 ii) 19812 iii) 98221 iv) 21982

10) கிராமத்து மக்கள் பற்களை துலக்குவதற்குப் பயன்படுத்தும் பொருள் எது?

i) சுட்ட உமி ii) வேம்பு மரக்குச்சி iii) ஆலங்குச்சி iv) மேற்கூறிய யாவும்

### பகுதி-2

கீழே தரப்பட்டுள்ள வாழ்த்தினை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

**தீபாவளி வாழ்த்து**

உள்ளத்தில் விளக்கெடுத்து
உறவெனும் நெய்யெடுத்து
அன்பெனும் கோயிலிலே
அழகாய் ஏற்றி வைத்து
முல்லைப்பூ சரந்தொடுத்து
முக்கனிச் சாறெடுத்து
அனுப்பிடும் கவிதையிலே
ஆயிரம் வாழ்த்துக்களே

பிரியமுடன் பா.பொன்னொளி

01) இந்த வாழ்த்து எப்பண்டிகைக்கானது?
02) இவ்வாழ்த்தினை எழுதியவர் யார்?
03) பிரியமுடன் என்ற சொல்லின் கருத்து யாது?
04) "முக்கனிச் சாறெடுத்து" என்ற வரியிலே வரும் முக்கனிகளும் எவை?

இப்பாடலிலுள்ள பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த சொல்லைத் தருக?

05) அன்பு - .......................... 06) அழகு - ......................

இப்பாடலிலுள்ள பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த சொல்லைத் தருக?

07) அன்பு - .......................... 06) அழகு - ......................

❁ கீழே தரப்படும் ஆங்கிலச்சொற்களின் தமிழ்ப் பதத்தை தருக?

09) Exhibition-................................ 10) Education- ..................................

❁ கீழே தரப்படும் தமிழ்ச்சொற்களின் ஆங்கிலப் பதத்தைத் தருக?

11) அஞ்சல் அட்டை-................................ 12) வெற்றியாளன்- ................................

❁ கீழே தரப்படும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் தருக?

13) மட கிரி தென்ன-.............................. 14) ஒபே வயச கீயத- .......................

❁ கீழே தரப்படும் தமிழ்ச்சொற்களின் கருத்தை சிங்களத்தில் தருக?

15) இது எனது தலை-.............................. 16) நான் தங்கை- ..........................

❁ ஒரு புத்தகசாலையில் நான்கு மாதங்களில் விற்கப்பட்ட நான்கு மொழி நூல்களின் விபரம் வருமாறு?

| மாதம் | சிங்களமொழி நூல் | தமிழ்மொழி நூல் | ஆங்கில மொழி நூல் | சமஸ்கிருத மொழி நூல் |
|---|---|---|---|---|
| ஜனவரி | 413 | 823 | 395 | 143 |
| பெப்ரவரி | 614 | 825 | 085 | 258 |
| மார்ச் | 494 | 233 | 305 | 429 |
| ஏப்ரல் | 258 | 323 | 164 | 439 |

17) ஜனவரி மாதத்தில் சிங்கள, தமிழ் மொழிகளில் மொத்தமாக எத்தனை நூல்கள் விற்கப்பட்டன?

18) குறித்த 4 மாதங்களிலும் விற்கப்பட்ட ஆங்கிலமொழி நூல்கள் எத்தனை?

19) 4 மாதங்களையும் சேர்த்து நோக்கின், எம்மொழி நூல்கள் அதிகமாக விற்கப்பட்டது?

20) 4 மாதங்களையும் சேர்த்து நோக்கின், சிங்கள மொழி நூல்களா அல்லது சமஸ்கிருத மொழி நூல்களா அதிகமாக விற்கப்பட்டுள்ளன?

21) ஜனவரி மாதத்தில் சமஸ்கிருத மொழியில் விற்கப்பட்ட நூல்களின் தொகையைவிட தமிழ்மொழி நூல்கள் எத்தனை அதிகமாக விற்கப்பட்டன?

❁ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தருக?

22) ஒரு சொல்லையோ சொற்றொடரையோ இரு பொருள்படத் தொடுப்பது?
23) இலக்கியங்களில் இடம்பெறும் ஒரு பறவை எது?
24) ஒருவர் இறந்த பின்னர் அவரின் உறவுப் பெண்கள் அவரை நினைத்து புலம்புவதை எவ்வாறு அழைப்பர்?
25) இலங்கையில் 04.02.1942இல் இடம்பெற்ற முக்கிய நிகழ்வு எது?

❁ கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

26) எல்லாப் பொருட்களும் எல்லாப் பிரதேசங்களிலும் ஒரே விலைக்கு விற்கப்படுகின்றன. ( )
27) அணில், காகம், வௌவால் முதலியவை தாவர வித்துக்கள் பரம்பலடைய உதவுகின்றன. ( )
28) புறொயிலர் கோழிகள் முட்டைக்காக வளர்க்கப்படுகின்றன. ( )
29) கீரையையும் வெண்டிக்காயையும் வெட்ட முன்பு கழுவ வேண்டும். ( )
30) பனங்கிழங்கை உலர்த்தி புழுக்கொடியல் தயாரிப்பதன்மூலம் நீண்ட காலம் பேணலாம். ( )

❁ " நாம் முதியோரை மதிப்போம்" எனும் தலைப்பில் எமது மனதில் உதித்த எண்ணங்களை 6 வாக்கியங்கள் எழுதுக? (ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை உட்பட நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்)

**"WISH YOU ALL THE BEST OF LUCKY,**
**GOD BLESS YOU"**
~ஆசிரியை பா.மதனரூபி~

## விடைகள்

**பகுதி 1**

| | |
|---|---|
| 01) | iv |
| 02) | i |
| 03) | ii |
| 04) | i |
| 05) | iv |
| 06) | iv |
| 07) | i |
| 08) | ii |
| 09) | iv |
| 10) | iv |

**பகுதி 2**

1) தீபாவளி
2) பா.பொன்னொளி
3) அன்புடன்
4) மா, பலா, வாழை
5) பாசம்/நேசம்
6) எழில்/வடிவு
7) வன்பு
8) அசிங்கம்
9) கண்காட்சி
10) கல்வி
11) Post Card
12) Winner
13) எனக்குப் பால் தாருங்கள்
14) உங்கள் வயது எத்தனை?
15) மே மகே ஹிச
16) மம நங்கி
17) 1,236
18) 949
19) தமிழ்மொழி நூல்கள்
20) சிங்கள மொழி நூல்கள்
21) 270
22) சிலேடை
23) அன்னம்
24) ஒப்பாரி
25) இலங்கை சுதந்திரம் பெற்றமை
26) ✗
27) ✓
28) ✗
29) ✓
30) ✓

## அகதி

எல்லாம் பெற்றவன்
எல்லாம் இழந்த நிலை
இருந்த இடம் இழந்தான்
இருக்கும் உறவிழந்தான்-நல்ல
துணை இழந்தான்
நாதியற்று அலைந்தான்
இவனுக்கொரு விலாசமில்லை-எனினும்
இருக்கின்றான் உயிரோடு
வீடிழந்தான் அதனால்
வீதியில் நின்றான்
அதுவுமில்லை என்றானதும்
அனைத்திடமும் அவனிருந்தான்
தொலைந்ததும் தொலைத்ததும்
தேடியும் கிடைக்கவில்லை
அன்று அவன் ஆண்ட பூமிக்கு
இன்று அவன் வந்தான் அகதியாய்

-பா.மதனபாரதி, அல்வாய்-

## வளருமா கூட்டுறவு?

அன்பான கூட்டுறவே
போர் சூழ்ந்த காலமதில்
பொலிவுடனே காணப்பட்டாய்
பொருட்கள் பலவற்றை
பொக்கிஷம்போல் விற்று
பெரும் இலாபம் அடைந்த நீ
போர் ஓய்ந்த நிலையில்
பொலிவிழந்து போய்விட்டாய்
காரணம் கேட்டால்
தனியார் கடையினிலே
தரமான பொருட்கள் எல்லாம்
மலிவான விலையிலே
மக்கள் பலர் வேண்டுகின்றார்
கூட்டுறவு கடைதனிலே
கூடிய விலை கொடுத்து
பொருட்கள் வாங்க
மக்கள் வருவதில்லை
என்ற சாட்டினால் ஏற்பட்ட
விழுக்காடு என்பதில்
கூட்டுறவு வாழும் வழி
இனி வரும் காலமதில் புலருமா?

-எஸ்.எம்.ராஜா-

## தூக்குக்கயிறு



வீரம்மிக்க சோதரியே
வீறுகொண்டு எழுந்து
நடந்து வந்த பாதையை
நன்கு திரும்பிப் பார்த்திடு

வறுமையில் வாடிய பலர்
வாழ்வில் எப்படி உயர்ந்தனர்?
எண்ணி நன்கு பார்த்திடு
ஏற்றம் பல பெற முயன்றாய் - உன்
முயற்சி முடிவாகிவிட்டதே!
சகோதரி ரிசானா-நீ
மடியவில்லை -உன்
கதை முடியவில்லை
இப்போதுதான் ஆரம்பம்

மூதூர் கிராமம் மிரளுது
சேயிழந்த தாயின் விழி
செய்தி பல சொல்லுது
உன் குடிசை வீடு
மாடமாளிகையாகுது
ஆனாலும் நீ வரவில்லை
உன் மரணத்தோடு -உன்
குடும்பச் சுமையும் போகின்றது

-அ.சீதாராம், பருத்தித்துறை-

## வாழவைத்த கூட்டுறவே! நீ வாழ்க!



வேலையில்லாத் திண்டாட்டம்
வீதியில் இறங்கிப் போராட்டம்
வேண்டியது கிடைக்காமல்
விரக்தியிலே மனம் பெரும் வாட்டம்
இத்தனைக்கும் வேட்டு வைத்து
இனிய நல்வாழ்வு காண வைத்த
பலவர்ணக்கொடி கொண்ட கூட்டுறவே!
பல்லாண்டு வாழியவே!
அடுப்பங்கரைதனிலே பூனை
அல்லாக்காய் படுத்திருக்க
பசியோடு எம் வயிறு
பரதம் ஆடிநிற்க
எம் அடுப்பிலும் நெருப்பு மூட்டி
ஏற்றிவைத்த உலைதனிலே
அறுசுவை உணவு சமைக்க
வழி அமைத்த கூட்டுறவே!
நீ வாழியவே!

-கரவை பிரேம்-

## கூட்டுறவுக் கொடிக் கீதம்

**எடுப்பு**

ஓங்கி எழும் கொடியே ஐக்கியம்
தாங்கிப் போற்றிடும் தக்கவர் பண்பினிலே
(ஓங்கி)

**தொடுப்பு**

வாழ்வளிக்கும் நல்லவளம் பொருளே – நாடு
தாழ்வையும் தகர்த்திடும் தகவோடு சீராக
(ஓங்கி)

**முடிப்பு**

இம்மையில் உள்ள மக்கள் ஈடிலாங்கிருக்க
செம்மையில் தனித்தும் சேர்ந்ததுமே சமமுற
உம்பொருள் இந்திரன் உடையகை வில்லின்
செம்பொருள் நிறமெல்லாம் சிறந்தொழி வீசிட
(ஓங்கி)

## 40வது ஆண்டு.......

1ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வியக்கமானது காலத்துக்கு காலம் ஏற்பட்ட பல மாற்றங்கள் காரணமாக பல பின்னடைவுகளையும்,இடப் பெயர்வுகளையும், தாராள பொருளாதார இறக்குமதிக் கொள்கையின் பாதிப்புக்களையும் சந்தித்தபோதும் முற்றுமுழுதாக அது அழிந்துவிடாது மீண்டும் தனது கூட்டுறவுக் கொள்கையின்படி நின்று தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்ட பெருமை கூட்டுறவுக்கு உண்டு.

மேலும் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் உற்பத்தியாளர்களையே அதன் அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்குவதனால் அது கடந்த 40 வருடங்களாக நிலைத்து நின்று சேவையாற்றிவருகின்றது. அத்துடன் தமது வளங்களை முற்றுமுழுதாக பயன்படுத்தி பொருளாதாரத்தில் ஓர் ஸ்திர நிலையை அடையவேண்டுமாயின் அரச பலமும், அரசியல் பலமும் இருக்க வேண்டும் என்றார்.

ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் க.தேவராசா அவர்கள் தனது ஆய்வுரையின்போது, இம்மலர் ஓர் வரலாற்று ஆவணமாகத் திகழ்வதுடன், இதன் அட்டைப் படம் பனை வளங்களிலிருந்து பெறப்படும் அனைத்து பொருட்களும் மனிதனுக்கு பிடித்தமானதும் அவசிய மானதும் என்பதை சுட்டிக்காட்டி நிற்கின்றது. இம்மலரில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் பெறுமதி வாய்ந்தவை எனவும் குறிப்பிட்டார்.

கூ.அ.உ.ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் தமதுரையில், முன்பக்க அட்டைப் படத்தில் பழமை மறவாத தன்மை காணக்கூடியதாக இருப்பது பாராட்டுக்குரியது. எவ்வளவுதான் நவீன மாற்றங்கள் வந்தபோதும் நாம் பழமையை மறக்காது பழமையோடு புதுமையையும் சேர்த்து எமது நிறுவனங்களை உயர்ந்த நிலைக்கு வளர்த்துச்செல்ல வேண்டும் என்றார்.

திரு இ.பாலச்சந்திரன் அவர்கள் தமதுரையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்படுகின்ற பனை தென்னை வள சங்கங்களோடு ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்ற சங்கங்கள் அனைத்து துறைகளிலும் சிறப்பாக செயற்பட்டு பொருளாதார வளம் நிறைந்த சங்கங்களாக காட்சியளிப்பது உண்மையான கூட்டுறவுக் கொள்கையின்படி செயற்படுவதை பறைசாற்றுகின்றது. இவற்றின் செயற்பாடுகளை ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த சங்கங்களும் முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட்டு வெற்றிபெறவேண்டும் எனக்கூறிய அவர், மலரினை அழகுற அமைக்க பாடுபட்ட அனைவருக்கும் பாராட்டுதலைத் தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு ப.சீவரத்தினம் அவர்கள் தமதுரையில், பனை அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டதன் நோக்கம், ப.தெ.வ. அ.கூ.சங்கங்களின் அங்கத்தவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்துவதும் அவர்களின் உற்பத்திகள் அனைத்தையும் நவீனமயப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்தை எய்துவதற்கு ஒத்துழைப்பும் ஆலோசனைகளையும் வழங்குவதேயாகும். எனது பதவிக் காலத்தில் அதனை முழுமையாக செய்வதற்கு பனை ஆராய்ச்சி நிலையம் ஊடாக என்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் எனக்கூறினார்.

மலரின் முதல் பிரதியைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு உதயன் அவர்கள் பெற்றுக்கொண்டார். சிறப்பு பிரதிகளை மக்கள் வங்கி உதவி முகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சி.க.வ.கூ.ச. சமாசம், இரண்டாம்படி கூ.சங்கங்கள், யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சபை, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கொத்தணிகள் ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## கூட்டுறவுக் கீதம்

**பல்லவி**

கூட்டுறவு மந்திரத்தை சொல்லுவோமே –இங்கு
கூடிடும் பகை பிணி வெல்லுவோமே (கூட்டு)

**அனுபல்லவி**

நாட்டில் வாழ்வோங்கி நிலைபெறவே – நல்ல
ஞானப் பெரியோர்கள் நாட்டி வைத்த (கூட்டு)

**சரணம்**

அன்புடனே வாய்மைதனில் நேர்மைகொண்டு
ஆர்வமதால் அனைவருமே ஒன்றாய்க் கண்டு
அன்புடனே பெருவாழ்வில் உழைத்தலென்றும்
உயர்வான கூட்டுறவுக் குயிராமன்றோ (கூட்டு)

துன்புடனே மக்களிங்கு சோர்ந்தபோது
தெய்வம் வந்துற்றதென வந்தணைந்து
தென்புதருங் கல்வி சுதந்திரமும் மேலாம்
தேசபக்தி விவசாம் செழிக்கச் செய்யும் (கூட்டு)

கூட்டுறவு நெறிகளே வேதமாகும்
கொண்டவற்றைக் கடைப்பிடிப்போர் மேலோராவர்
வாட்டமுறும் தொழிலாளிக் கூட்டாளிக்கும்
வாழ்வளிக்கும் உழவருக்கும் வாழ்வு நல்ல (கூட்டு)

தேட்டத்தை சீராகப் பேணச் செய்யும்
செப்புவட்டிக் கொடுமைக்கும் காலனாகும்
நாட்டுக்கு ஊட்டத்தை நல்க வல்ல
நலமிக்க வேறொன்று இல்லை என்று (கூட்டு)

சாதியொடு சமயநெறிப் பூசல்போக்கி
சேரும் அரசியல் வாழக்கை சார்பு நீக்கி
பேதங்கள் தலைதூக்காப் பான்மையாக்கி
பாரினிலே மாந்தர்க்கு வாழ்வுசேர்க்க (கூட்டு)

பேதமின்றி கைவிரல் பொற் திறங்களாக்கி
பேசிவரும் சமத்துவத்தை செயலில் காட்டி
நீதிமிகு உயர் தெய்வநாட்டில் இன்பம்
நீர்காணக் கூட்டுறவு நிலைக்கச் செய்வீர் (கூட்டு)

## விபத்து மரண.......

1ம் பக்கத் தொடர்ச்சி

இதில் தொழிலின்போது பனை மரத்தால் வீழ்ந்து மரணமடைந்த பண்டத்தரிப்பு சங்கத்தைச் சேர்ந்த க.சின்னத்தம்பிக்கு ரூபா 71,250வும், அவரின் பின்னுரித்தாளருக்கு மாதாந்த ஓய்வூதியமும் வழங்கப்படவுள்ளன.

சமாசத்தின் விசேட விபத்து கொடுப்பனவுத் திட்டத்தின்கீழ் பின்வருவோருக்கு நிதி வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி சங்கத்தை சேர்ந்த சு.வடிவேலு ரூபா 26,000, நா.தெய்வேந்திரம் ரூபா 15,000, வேலணைச் சங்கத்தைச் சேர்ந்த ச.யேசுராசா ரூபா 14,500, பண்டத்தரிப்புச் சங்கத்தைச் சேர்ந்த எ.யேசுராசா ரூபா 11,000, ப.சுரேஸ் ரூபா 16,000, மா.சசிகரன் ரூபா 20,000 உம் பெற்றுக்கொள்ளவுள்ளனர். அத்துடன் 24 அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சமாசத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கயிறிழுத்தல்........

1ம் பக்கத் தொடர்ச்சி

யாழ்.பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள இளஞ்சிங்கம் சன சமூக நிலைய மைதானத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

துடுப்பாட்டப் போட்டி இம்மாதம் 27ம்திகதி கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கத்துக்கு அருகிலுள்ள தாவடி ஸ்ரீகாளியம்பாள் விளையாட்டு மைதானத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள சங்கங்கள், கொத்தணிகள் குறித்த நேரத்துக்கு சமூகமளிக்குமாறு சமாசத்தால் கேட்கப்பட்டுள்ளது.

## நூல் வெளியீடு

இலங்கை கூட்டுறவு முகாமைத்துவ நிறுவனத்தின் முகாமைத்துவ ஆலோசகர் திரு சி.கோணேஸ்வரன் அவர்களால் எழுதப்பட்ட "சமூகவியல் சிந்தனைகள்" எனும் நூல் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இம்மாதம் 14ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு இ.இராஜாராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முதன்மை விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், வடமாகாண ஊழியர் ஆணைக்குழுச் செயலாளர் செல்வி க.பிரபா, யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




## விற்பனைக்கு.....

1ம் பக்கத் தொடர்ச்சி

எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிடவும் வவுனியா மாவட்டதில் உள்ள பனை தென்னை வள சங்கங்களின் விற்பனைக்காகவும் போத்தல் கள்ளினை விநியோகிப்பதற்கும் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைய சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மானிப்பாய் சங்க முன்பள்ளி விளையாட்டு விழா





மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் அனுசரணையில் இயங்கும் முன்பள்ளி ஒன்றின் விளையாட்டுவிழா நிகழ்வின்போது..........

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2013ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டது.